முருகப்பெருமான் துணை

**மகான் கோச்செங்கட்சோழ நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.02.2023**, வியாழக்கிழமை

1. தவமாக வந்த அரங்கா
தன்னலம் கருதா சேவைஆற்றிட
அவதாரம் புரிந்த தேசிகா
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா லாபதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 11 ம் நாள், 23.02.2023 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு கோச்செங்கட் சோழ நாயனார்யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மைபட உலகோர் சிறக்க
ஞானம் தரும் அரங்க மகான்
ஞானபண்டிதனார் அம்சமாகும்
4. ஆகவே வேலவனார் சக்தி
அனுகூல ஆசிபெற வேண்டி
செகமெல்லாம் அலையும் மக்களே
செப்பிடுவேன் பிரணவக்குடிலுக்குவர
5. வருகவே அரங்கன் ரூபில்
வடிவேலனை கண்டு சேவிக்கும்
அருமையான வாய்ப்புக் கிட்டும்
ஆற்றல் கூடியும் சிறக்கும்
6. சிறப்பு தரும் சிந்தை தெளிவுதரும்
சித்திகளும் கூடி இனிதே
அறத்தின் நெறி விட்டு அகலா
ஆனந்தமான வாழ்வாக மாறி
7. மாறியே சகல உயிர்கட்கும்
மதிப்பளிக்கும் வண்ணம் தேறி
ஆறுமுகனார் ஆசி அருளுடன்
அழியாமை வரமும் பெற்று சிறப்பர்
8. சிறப்பான ஞான உலகம் படைக்க
சித்திகள் நிறைந்த ஞானிகளை
அறப்போரில் இயக்கி மாற்றம்
அரங்கமகான் செய்து வருக
9. வருகவே அரங்கனை நாடி
வையகமெங்கும் உள்ள மக்கள்
தருமம் தனை கையில் எடுத்து
தரணியெங்கிலும் செய்துவர

10. வரவர உலக மாற்றம்
வரமாக மக்களுக்குக்கிட்டி
சரிவர முழுமை மாற்றமாக
சரணாகதியால் உலகோர் தேறி

11. தேறியே ஞான ஆட்சியும்
தெரிவிப்பேன் தமிழகம் தொட்டு
பாரதம் எங்கிலும் அமையும்
பாடிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–